கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,
பெரியகுளம்.

ம.சா. 1 நாள்: 16.03.2026

வழக்கு எண் MCOP No. 181/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வம் | ஊர் | : ஸ்ரீராம்நகர் |
| தந்தை பெயர் | : வீரன் | தாலுகா | : பெரியகுளம் |
| தொழில் | : கூலி வேலை | வயது | : 50/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கின்றேன்.

1.04.11.2018 ஆம் தேதியிட்டு வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்448/2018 u/s 279,337,304A ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 1

2. 23.11.2018 ஆம் தேதியிட்டு எனது மகன் மணி இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகவ்ல மச.ா.ஆ– 2

3. 05.11.2018 ஆம் தேதியிட்டு இறந்துபோன எனது மகன் மணி என்பவருக்கு வழுஙஙகப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 3

4. விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 60 AE 1571 என்ற வாகனத்தின் காப்பீடு நகல் ம.சா.ஆ.4

5. எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது ம.சா.ஆ. 5

6. எனது வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ–.6

7. வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்448/2018 u/s 279,337,304A ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ. 7

8. வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்448/2018 u/s 279,337,304A ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ– 8

9. விபத்தில் சம்பந்தப்பட்ட TN 60 AD 1971 என்ற இருசக்கர வாகனம் மற்றும் TN 60 AB 1571 என்ற இருசக்கர வானம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் 2 எண்ணம் நீதிமன்ற சான்றிட்ட நகல்கள் ம.சா.ஆ. 9

10. இறந்து போன மணி என்பவருக்கு வழுங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் 2 எண்ணம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ .10

11. விபத்தில் இறந்து போன  எனது மகன் மணி  என்பவருக்குரிய ஓட்டுனர் உரிமத்தின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ம.சா.ஆ.11

மனுப்படி உத்தரவாக வேண்டி  பிரார்த்திக்கிறேன்.

<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

(2 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.03.16 18:05:35 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.